Regional Bulletin / Puducherry / Tamil

18.10/ 28.06.2024 / Script

வணக்கம்

ஆகாஷ்வாணி - புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : மலர்விழி

நாள் 28.06.2024 வெள்ளிக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

நீட் முறைகேடுகள் பற்றிய பிரச்சனை குறித்து இன்று நாடாளுமன்றத்தில் ஏற்பட்ட அமளி காரணமாக, மக்களவை, நாள் முழுவதற்கும், மாநிலங்களவை, பிற்பகல் 2 மணி வரையிலும் ஒத்தி வைக்கப்பட்டன.

பிரதமர் திரு. நரேந்திர மோடி வரும் 30ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை ஆகாஷ்வாணியின் மன்-கீ-பாத் நிகழ்ச்சி மூலம், தமது எண்ணங்களை மக்களுடன் பகிர்ந்து கொள்கிறார்.

நீட் விலக்க மசோதாவிற்கு மத்திய அரசின் ஒப்புதல் கோரி, தமிழக சட்டமன்றத்தில் இன்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கொண்டுவந்த தனி தீர்மானம், ஏக மனதாக நிறைவேற்றப் பட்டது.

புதுச்சேரியில், ஊர்க்காவல் படை ஆள் சேர்ப்பு பணிகளுக்கான எழுத்துத் தேர்வு, வரும் ஞாயிற்றுக்கிழமை, 12 மையங்களில் நடைபெறவுள்ளது.

நாடாளுமன்றம் 1 (20)

நீட் தேர்வில் முறைகேடுகள் நடந்ததாக கூறப்படும் பிரச்சனை குறித்து இன்று நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் ஏற்படுத்திய அமளி

காரணமாக, மக்களவை, நாள் முழுவதற்கும், மாநிலங்களவை, பிற்பகல் 2 மணி வரையிலும் ஒத்தி வைக்கப்பட்டன. மக்களவையில் முதலாவது ஒத்தி வைப்பிற்குப் பின்னர், நண்பகல் 12 மணிக்கு அலுவல்கள் மீண்டும் தொடங்கிய போது, காங்கிரஸ், திமுக, சமாஜ்வாதி உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அவையின் மையப் பகுதியில் கூடி, மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் ராஜிநாமா செய்ய வேண்டும் எனக் கோஷமிட்டனர். பிரச்சனை குறித்து கமிட்டி அமைக்கப் பட்டுள்ளதாக சபாநாயகர் திரு. ஓம் பிர்லா தெரிவித்தார். குடியரசு தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் நடைபெற வேண்டிய நேரத்தில் மற்ற விஷயங்களைப் பேசுவது மரபல்ல என்று, நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ கூறினார். முன்னதாக, இன்று காலை அலுவல்கள் தொடங்கிய போது எதிர்க்கட்சிகளின் ஒத்தி வைப்பு தீர்மானத்தை அனுமதிக்க மறுப்பு தெரிவித்தார். குடியரசு தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானங்கள் மீதான விவாதங்களில், எதிர்க்கட்சிகள் தங்களின் பிரச்சனைகளை எழுப்பலாம் என்று அவர் கூறினார். இதை தொடர்ந்து ஏற்பட்ட அமளி காரணமாக மக்களவை நண்பகல் 12 வரை ஒத்தி வைக்கப்பட்டது. மாநிலங்களவையிலும் இதேபோன்ற சூழ்நிலைக்கு இடையில், அலுவல்கள் முதலில் நண்பகல் 12

மணி வரையிலும், பின்னர் பிற்பகல் 2 மணி வரையிலும் ஒத்தி வைக்கப்பட்டன. 2 மணிக்கு மேல், குடியரசு தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதம், மாநிலங்களவையில் எடுத்துக் கொள்ளப் பட்டது. பிஜேபி உறுப்பினர் திரு. சுதான்ஷு திரிவேதி, விவாதங்களைத் தொடக்கி வைத்துப் பேசுகையில், மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் 3ஆவது முறையாக, 3 இலக்க வெற்றியை எட்டத் தவறி இருப்பதாக கூறினார். இம்முறை தென் மாநிலங்களில், தேசிய ஜனநாயக கூட்டணி, காங்கிரஸ் கட்சியை விட அதிக வாக்குகள் பெற்றுள்ளதாக அவர் தெரிவித்தார். கூச்சல்-குழப்பம் மற்றும் அடுத்தடுத்த ஒத்திவைப்புகளுக்கு இடையே அவர் பேசுகையில், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் இந்தியா புதிய உயரங்களை எட்டி இருப்பதாகக் கூறினார். இங்கிலாந்தையும் தாண்டி, உலகின் 3ஆவது பெரிய பொருளாதாரமாக இந்தியா மேம்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். குடியரசு தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானங்கள் மீதான விவாதங்களில், பாரதீய ஜனதாவைச் சேர்ந்த திரு. பீம்சிங், ஒய்எஸ்ஆர் காங்கிரரைச் சேர்ந்த திரு. கொல்லா பாபுராவ் உள்ளிட்ட எம்பிக்களும், பங்கேற்றுப் பேசினர்.

நரசிம்ம ராவ் (6)

இன்று முன்னாள் பிரதமர் பி.வி. நரசிம்ம ராவ் பிறந்த நாளை ஒட்டி பிரதமர் திரு. நரேந்திர மோடி, அன்னாருக்கு புகழாரம் சூட்டியுள்ளார். விவேகமான தலைமைப் பண்புக்கு பெயர் பெற்றவர் பி.வி. நரசிம்மராவ் என்றும், நாட்டிற்காக அன்னாரின் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில், இவ்வாண்டு ஆரம்பத்தில் அன்னாருக்கு பாரத ரத்னா விருது வழங்கியது, தமது அரசுக்குப் பெருமை என்றும், சமூக ஊடகப் பதிவு ஒன்றில் பிரதமர் தெரிவித்துள்ளார்.

மன் கீ பாத் (8)

பிரதமர் திரு. நரேந்திர மோடி வரும் 30ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை ஆகாஷ்வாணியின் மன்-கீ-பாத் நிகழ்ச்சி மூலம், இந்தியா மற்றும் வெளிநாடுகளில் உள்ள மக்களுடன் தமது எண்ணங்களை பகிர்ந்து கொள்கிறார். பிரதமரின் இந்த 111ஆவது மனதின் குரல் நிகழ்ச்சி, அன்றைய தினம் காலை 11 மணிக்கு, அனைத்து ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷன் அலைவரிசைகளிலும் ஒலிபரப்பாகும். பிரதமர் திரு. நரேந்திர மோடி, 3ஆம் முறையாக பிரதமர் பதவி ஏற்ற பின்னர் வழங்கும் முதலாவது மன்-கீ-பாத் நிகழ்ச்சியாக இந்நிகழ்ச்சி அமைவதும் குறிப்பிடத்தக்கது.

கிரிமினல் சட்டம் – 1 (20)

பாரதீய நியாய சம்ஹிதா, பாரதீய நாகரிக் Suraksha சம்ஹிதா, பாரதீய Sakshya சம்ஹிதா ஆகிய 3 புதிய குற்றவியல் சட்டங்களும் அடுத்த மாதம் 1ஆம் தேதி முதல் அமலுக்கு வரவுள்ளன. கடந்த ஆண்டு நாடாளுமன்றத்தின் குளிர்கால கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்ட இம்மூன்று சட்டங்களும், இந்திய குடிமக்களுக்கு அதிகாரம் அளிப்பதில், முக்கிய நடவடிக்கையாக திகழ்கின்றன. நாட்டின் நீதிக் கட்டமைப்பை திறம்பட்டதாகவும், அனைவரும் எளிதில் அணுகத் தக்கதாகவும் மாற்றும் நோக்கத்திலான இப்புதிய சட்டங்களில், குற்றச்செயல்கள் பற்றிய தகவல்களை ஆன் லைன் மூலம் அளிக்கவும், எந்தவொரு காவல் நிலையத்திலும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவும் வகை செய்யப் பட்டுள்ளது. கைது செய்யப்படும் நபர்கள் தங்களுக்கு விருப்பமான ஒருவருக்கு தகவல் கொடுக்க உரிமை வழங்கப்பட்டுள்ளது. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை முன்னுரிமை அடிப்படையில் விசாரிக்கவும், வகை செய்யப்பட்டுள்ளது. 3 புதிய குற்றவியல் சட்டங்களின் படி, புலனாய்வு, விசாரணை மற்றும் நீதிமன்ற நடைமுறைகளில் தொழில்நுட்பத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு உள்ளதாகவும், புதிய குற்றவியல் சட்டங்களை ஜூலை 1 முதல் அமல்படுத்த, அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகளை மத்திய அரசு முற்றிலும் ஆயத்தப்படுத்தி இருப்பதாகவும் அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கிரிமினல் சட்டம் – 2 (15)

புதிய குற்றவியல் சட்டங்கள் குறித்து ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷனில் செய்திகள் மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகள் மூலமாக விழிப்புணர்வு ஏற்படுத்தப் படுகிறது. விழிப்புணர்வு நோட்டீசுகள் மற்றும் கையேடுகளும் விநியோகிக்கப் படுகின்றன. சமூக ஊடகங்கள் மற்றும் இணையதளம் மூலமாகவும், விழிப்புணர்வு தகவல்கள் வழங்கப்படுகின்றன. பள்ளி மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் பாடத்திட்டத்தில் புதிய கிரிமினல் சட்டங்கள் பற்றிய பாடங்களைச் சேர்க்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. புதிய கிரிமினல் சட்டங்கள் குறித்து உயர் கல்வி நிறுவனங்களில் வரும் 1ஆம் தேதி, பயிலரங்குகள் விநாடி வினா போட்டிகள் மற்றும் இதர நிகழ்ச்சிகளை நடத்த பல்கலைக்கழக மானியக் குழு, அகில இந்திய தொழில்நுட்ப கல்வி சபை உள்ளிட்ட அமைப்புகள் ஏற்பாடு செய்துள்ளன. புதிய கிரிமினல் சட்டங்களின் முக்கிய அம்சங்கள் குறித்து அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் ஒவ்வொரு காவல் நிலையத்திலும், பொறுப்பு அதிகாரிகள் மூலம், நிகழ்ச்சிகள் நடத்தப்பட உள்ளன.

நீட் விலக்க மசோதா (14)

தமிழக அரசின் நீட் விலக்க மசோதாவிற்கு மத்திய அரசு உடனடியாக ஒப்புதல் அளிக்க வேண்டும் என்றும், நீட் தேர்வைக் கைவிடும் வகையில், மருத்துவ ஆணைய சட்டத்தில் திருத்தம் கொண்டுவர

வேண்டும் என்றும் வலியுறுத்தி, தமிழக சட்டமன்றத்தில் இன்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கொண்டுவந்த தனி தீர்மானம், ஏக மனதாக நிறைவேற்றப் பட்டது. மசோதா குறித்து மத்திய அரசு கேட்ட எல்லா கேள்விகளுக்கும், தமிழக அரசு விளக்கம் அளித்து இருப்பதாக, தீர்மானத்தை அவையில் கொண்டு வந்து பேசுகையில் முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் கூறினார். நீட் தேர்வினால், கிராமப்புற ஏழை மாணவர்களுக்கு மருத்துவப் படிப்பு எட்டாக் கனியாக மாறிவிட்டதாகவும், நீட் தேர்வுக்கு எதிரான தமிழகத்தின் குரல், இந்தியாவின் குரலாக எதிரொலித்து வருவதாகவும், அவர் குறிப்பிட்டார். இத் தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து, பிஜேபி சட்டமன்ற உறுப்பினர்கள் அவையில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.

காவல்துறை புதுச்சேரி (8)

புதுச்சேரியில், ஊர்க்காவல் படை ஆள் சேர்ப்பு பணிகளுக்கான எழுத்துத் தேர்வு, வருகிற 30ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை, 12 மையங்களில் நடைபெறவுள்ளது. கடந்த பிப்ரவரி மாதம் நடைபெற்ற உடல் தகுதி தேர்வில் வெற்றி பெற்ற, 3 ஆயிரத்து 34 ஆண் போட்டியாளர்களும், ஆயிரத்து 195 பெண் போட்டியாளர்களும், எழுத்து தேர்வில் பங்கேற்க உள்ளனர். தேர்வுக்கூட நுழைவுச் சீட்டை, புதுச்சேரி அரசின் recruitment

இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்று பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அறிவித்துள்ளது.

செந்தில் குமார் (5)

புதுச்சேரி ஆகாஷ்வாணி நிலையத்தில், உதவி இயக்குநராக பணிபுரிந்து வரும் மயிலாடுதுறை திரு. த. செந்தில்குமார், நிலையத்தின் நிகழ்ச்சிப் பிரிவுத் தலைவராக இன்று பொறுப்பேற்றுக் கொண்டார். 1994ஆம் ஆண்டு ஆகாஷவாணியில் சேர்ந்த திரு. செந்தில்குமார் அவர்கள், ஏற்கனவே காரைக்கால் வானொலி நிலையத்திலும் பணிபுரிந்துள்ளார்.

தேர்வு முகமை (11)

தேசிய தேர்வு முகமையில் சீர்திருத்தம் கொண்டு வருவது குறித்து பரிந்துரை வழங்க, முன்னாள் இஸ்ரோ தலைவர் டாக்டர் கே.ராதாகிருஷ்ணன் தலைமையில், மத்திய கல்வி அமைச்சகத்தால் அமைக்கப்பட்டுள்ள, உயர்நிலை நிபுணர்கள் குழு, சீர்திருத்தம் மற்றும் மறுசீரமைப்பு குறித்து, பொதுமக்களின் ஆலோசனைகளை நாடியுள்ளது. மை-கவ் இணையதளம் மூலம் பொதுமக்கள் ஜூலை 7ஆம் தேதி வரை தங்களின் ஆலோசனைகளை வழங்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. தேசிய தேர்வு முகமையின் கட்டமைப்பு மற்றும் செயல்பாடுகளிலும், தேர்வு நடைமுறைகள் மற்றும் தரவுப் பாதுகாப்பு ஏற்பாடுகளிலும்

செய்யப்பட வேண்டிய சீர்திருத்தங்கள் குறித்து 2 மாதங்களுக்குள் பரிந்துரை வழங்குமாறு, அமைச்சகம், இந்த நிபுணர் குழுவை ஏற்கனவே கேட்டுக்கொண்டுள்ளது.

மருத்துவ தொழில்நுட்பம் (10)

அகமதாபாத், ஹைதராபாத், கொல்கத்தா, குவஹாத்தி உட்பட நாட்டின் 7 இடங்களில் அமைந்துள்ள, தேசிய மருந்தாக்க கல்வி மற்றும் ஆராய்ச்சி கழகங்களில், செவ்வியல் மையங்களை அமைக்க மத்திய அரசு 700 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. 5 ஆண்டுகளுக்கான இந்த ஒதுக்கீட்டில் நடப்பு ஆண்டில் 243 கோடி ரூபாய்க்கு ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளதாக மத்திய ரசாயன மற்றும் உரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. உத்தேச செவ்வியல் மையங்களில், மருத்துவக் கருவிகள், மொத்த மருந்துகள், மற்றும் நுண்ணுயிரி எதிர்ப்பு மருந்துகளின் உற்பத்தி தொடர்பான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்கு, முக்கியத்துவம் அளிக்கப்படும் என்றும், அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

IANS

டெல்லி மழை -1 (18)

தலைநகர் டெல்லியில் இன்று கனமழை காரணமாக பல இடங்களில் தண்ணீர் தேங்கியதால் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. பருவமழை, டெல்லி உட்பட வடக்கு மற்றும் மத்திய இந்தியாவின் பெரும்பாலான

பகுதிகளை எட்டி விட்டதாகவும், டெல்லி சப்தர்ஜங் வானிலை ஆய்வு மையத்தில், 22.8 சென்டிமீட்டர் மழை பதிவாகி இருப்பதாகவும் இந்திய வானிலை ஆய்வுத் துறை விஞ்ஞானி திரு. ஆர்.கே. ஜெனாமணி தெரிவித்துள்ளார். டெல்லி, துணைநிலை ஆளுநர் திரு. வி.கே. சக்சேனா, மழை நிலவரங்கள் குறித்து, இன்று சம்பந்தப்பட்ட அனைத்து துறை அதிகாரிகளுடன் அவசர ஆலோசனைக் கூட்டம் நடத்தினார். இதற்கிடையே டெல்லி விமான நிலையத்தின் முதலாவது முனையத்தில் இன்று அதிகாலை, மழையினால் கூரை இடிந்து விழுந்ததால் ஒருவர் உயிரிழந்தார். நான்கு பேர் காயமடைந்தனர். விமானங்களை சுமூகமான முறையில் இயக்க மாற்று ஏற்பாடுகள் செய்யப்-பட்டுள்ளதாக, மத்திய சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது. சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் திரு. ராம் மோகன் நாயுடு சம்பவ இடத்தை நேரில் சென்று பார்வையிட்டார். டெல்லி சப்தர்ஜங் மருத்துவமனைக்கும் அவர் நேரில் சென்று, காயமடைந்தவர்களை சந்தித்து ஆறுதல் கூறினார்.

டெல்லி மழை -2 (5)

சம்பவத்தில் பாதிக்கப் பட்டவர்களுக்குத் தேவையான உதவிகளை, டெல்லி விமான நிலையம் வழங்கி வருகிறது. உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு 20 லட்சம் ரூபாய் இழப்பீடு அறிவிக்கப் பட்டுள்ளது.

காயமடைந்தவர்களுக்கு தலா 3 லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்றும் டெல்லி விமான நிலைய நிர்வாகம் அறிவித்துள்ளது.

வானிலை (7)

மேற்கு திசைக் காற்றின் வேக மாறுபாடு காரணமாக, வரும் ஜூலை 4ஆம் தேதி வரை, தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் தமிழகத்தில் ஓரிரு இடங்களில் மழை பெய்துள்ளது. அதிகபட்சமாக, நீலகிரி மாவட்டம், அவலாஞ்சியில், 11 சென்டிமீட்டர் மழை பதிவாகியுள்ளது.

கர்நாடகா விபத்து (6)

கர்நாடகா மாநிலம், ஹாவேரி மாவட்டத்தில் இன்று டெம்போ, லாரி மீது மோதியதால் ஏற்பட்ட விபத்தில், 2 குழந்தைகள், 8 பெண்கள் உட்பட 13 பேர் உயிரிழந்தனர். 4 பேர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளனர். ஷிவமொக்கா மாவட்டத்தைச் சேர்ந்த இவர்கள், டெம்போவில் கோவிலுக்குச் சென்று திரும்பிய போது, விபத்தைச் சந்தித்ததாக காவல்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அமர்நாத் யாத்திரை (6)

ஜம்மு-காஷ்மீர் துணை நிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹா, இன்று ஜம்முவில் உள்ள பகவதி நகர் அடிவார முகாமில் இருந்து, முதல் தொகுப்பு அமர்நாத் யாத்ரீகர்களின் பயணத்தை கொடியசைத்து தொடக்கி வைத்தார். முன்னதாக, அங்குள்ள கோவிலில் அவர் வழிபட்டார். காஷ்மீர் பள்ளத்தாக்கில் உள்ள அமர்நாத் குகைக் கோவிலுக்கு, பஹல்காம் மற்றும் பல்டால் பாதை வழியான வருடாந்திர யாத்திரை, நாளை தொடங்க உள்ளது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

நீட் முறைகேடுகள் பற்றிய பிரச்சனை குறித்து இன்று நாடாளுமன்றத்தில் ஏற்பட்ட அமளி காரணமாக, மக்களவை, நாள் முழுவதற்கும், மாநிலங்களவை, பிற்பகல் 2 மணி வரையிலும் ஒத்தி வைக்கப்பட்டன.

பிரதமர் திரு. நரேந்திர மோடி வரும் 30ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை ஆகாஷ்வாணியின் மன்-கீ-பாத் நிகழ்ச்சி மூலம், தமது எண்ணங்களை மக்களுடன் பகிர்ந்து கொள்கிறார்.

நீட் விலக்க மசோதாவிற்கு மத்திய அரசின் ஒப்புதல் கோரி, தமிழக சட்டமன்றத்தில் இன்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கொண்டுவந்த தனி தீர்மானம், ஏக மனதாக நிறைவேற்றப் பட்டது.

புதுச்சேரியில், ஊர்க்காவல் படை ஆள் சேர்ப்பு பணிகளுக்கான எழுத்துத் தேர்வு, வரும் ஞாயிற்றுக்கிழமை, 12 மையங்களில் நடைபெறவுள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RSS/SM/VM